Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி–13 | 26–03–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –037

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல், அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ் சாலை, கிளிநொச்சி. (சி-9407)

RV பந்தல் சேவை, தர்மபுரம்.

# துரோகி கருணாவை எம் மண்ணிலிருந்து களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது!

## கருணாவைவிட்டு விலகியிருக்குமாறு போராளிகளிடம் புலிகள் கோரிக்கை

**உண்மைநிலையை அறியாப் போராளிகளையும் மக்களையும் பயன்படுத்தி, எம் விடுதலைப் போராட்டத்தையும் எம் மண்ணையும் துரோகிகளுக்கும் எதிரிகளுக்கும் விற்றுவிடுவதே கருணாவின் திட்டமாகும். நாம் இதுவரை சிந்திய இரத்தத்தையும் புரிந்த தியாகங்களையும் அந்நியருக்கு விற்கின்றார். எம்மினத்தைக் காப்பதற்காக, துரோகி கருணாவை எம்மண்ணிலிருந்து களைவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவ்வாறு மட்டு. அம்பாறையின் தற்போதைய நெருக்கடி தொடர்பாக அங்குள்ள போராளிகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடம் நேற்று விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அன்புக்குரிய மட்டு-அம்பாறைப் போராளிகளே, பொறுப்பாளர்களே,

நமது மண்ணின் பெருமைக்கும் மாவீரர்களிற்குங் களங்கத்தை ஏற்படுத்தியிருக்கும் கருணாவின் நடவடிக்கைகள் தொடர்பாக நீங்கள் உண்மைகளைப் புரிந்து கொண்டு, சரியான நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. தமிழீழத்தின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்

(IVஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சாரத்தில் ஈடுபட்ட பல்கலைமாணவர் மீது பொலிசாரின் பாதுகாப்புடன் வந்து ஈ.பி.டி.பி.தாக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆதரவாகப் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீது ஈ.பி.டி.பி. தேசவிரோதிகள் நடத்திய தாக்குதலில் இரு மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றைய தினம் நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ப. பகீரதன் மற்றும் ஒன்றிய உறுப்பினர் புவிராஜ் ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும்

(IVஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் பொதுமக்கள் மீது பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் பொலிசாருக்கும் பொது மக்களுக்கு மிடையே பெரும் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது பொலிசார் மேற்கொண்ட தடியடிப்பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சுக்களால் மக்கள் பலர் அடி காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

எதிர்வரும் தேர்தலுக்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆதரவுதெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்படி பகுதியில் பிரச்சாரநடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது அங்கு வந்த பொலிசார் இவர்கள் சட்டத்திற்குப் புறம்பாக பிரசாரம் செய்வதாகக் குற்றம் சாட்டி அவர்களை விரட்டியடிக்க முற்பட்டுள்ளனர். அத்துடன் அங்குபிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 4 பல்கலைக்கழக மாணவர்களையும் கைது செய்து சென்றுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஏனைய மாணவர்களும் அப்பகுதிகளில் நின்றிருந்த பொதுமக்களுமாகத் திரண்டு கைது செய்தமாணவர்களை

(IV.ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. (சா/த) பரீட்சை
## கிளி. மாவட்டத்தில் 3 மாணவிகள் பத்துப் பாடங்களிலும் சிறப்புச் சித்தி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிலிருந்து 2003ஆண்டு க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றி சிறப்புச் சித்தியெய்திய மாணவ, மாணவிகளினது பெயர் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. எம். வைஷ்ணவி கிளி/ திரேசா பெண்கள் கல்லூரி, எம். சிந்துஜா கிளி. இந்துக்கல்லூரி, ஏ.கதீசா பூநகரி ம/வி ஆகியோர் கிளிநொச்சி மாவட்டத்தில் 2003 க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றி 10 ஏ சிறப்புச் சித்திகளைப் பெற்ற மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது

(IIIஆம் பக்கம் பார்க்க)

–மக்கள் வாக்களிப்புக்கு வசதியாக–

## ஏ–9, உயிலங்குளம் ஊடான போக்குவரத்தில் மாற்றம்

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்கு ஏற்ற வகையில் போக்குவரத்து சேவைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அந்தவகையில் ஏ9வீதி மற்றும் மன்னார் உயிலங்குளம் வீதி ஆகிய இரண்டின் ஊடான மக்கள் போக்குவரத்துக்களும் எதிர்வரும் 01.04.2004 அன்று நண்பகல் 12.00மணியுடன் நிறுத்தப்பட்டு 03.04.2004அன்று மீண்டும் மக்கள் போக்குவரத்துக்காக திறந்துவிடப்படும்.

இதேவேளை மேற்படி இரண்டு வீதிகள் ஊடான பாரஊர்திகளின் போக்குவரத்துக்களும் வரும் 31ஆம்01ஆம்,02ஆம் திகதிகளில் நிறுத்தப்பட்டிருக்கும். எனவே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களின் வாக்களிப்புக்கு ஏற்றவகையில் கொண்டுவரப்பட்ட மேற்படி நடைமுறைக்கு அமைவாக அனைவரையும் செயற்படும் வண்ணம் தமிழீழ அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (லோ)

## சுயேட்சைக் குழு–2இல் வேட்புமனு தாக்கல் செய்த 9பேர் விலகல்

(அலுவலகசெய்தியாளர்)

யாழ் மாவட்டத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்த சுயேட்சைக்குழு 2ன் சார்பாக வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்த 9பேர் தாங்கள் அதி லிருந்து விலகிக்கொள்வதாக நேற்று கிளிநொச்சியில் வைத்து தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், எங்களுக்கு இப்படி ஒரு நடவடிக்கை ஒன்றில் சம்பந்தப்படுத்தப்படுவோம் என்று கடைசி வரையும் நினைக்கவில்லை. ராபி என்னும் நபர் ராஜு என்பவருடன் வந்து வெள்ளைத் தாளில் கையொப்பமிட்டால் போதும் என்று கூறியதற்கிணங்கவே ராஜு என்பவரின் நம்பிக்கையின் பிரகாரம் கையொப்பமிட்டோம். எங்களுக்கு வாக்குச்சாவடி என்றால் என்னவென்பதே தெரியாது. நாங்கள் பத்திரிகையில் பெயர்கள் வந்துள்ளது என்று கேள்விப்பட்டதன் பின்பே இது

(IVஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்கள், கைதுகளைக் கண்டித்து இன்று யாழ்.இல் கடையடைப்பு, மறியல்

நேற்று யாழ்.நகரில் இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல்கள், மற்றும் கைதுச் சம்பவங்களைக் கண்டித்து யாழ்நகரில் பல்வேறு விதமான பகிஷ்கரிப்புப் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

யாழ்.கொக்குவில் பகுதியில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவர்கள் மீது படையினரும் ஈ.பி.டி.பி.யினரும் தாக்குதல் நடத்தியுள்ளதுடன் யாழ். திருநெல்வேலிப்பகுதியில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 4பல்கலைக்கழக மாணவர்களை பொலிசார் கைதுசெய்தும் உள்ளனர்.

தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தும் விதமாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆதரவாக செயற்பட்ட மாணவர்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட அராஜகங்களைக் கண்டித்தே இப்போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்ஒன்றியம் அறிவித்துள்ளது. அந்த அடிப்படையில் இன்று

(IVஆம் பக்கம் பார்க்க)

## குடாரப்பு தரையிறக்க நடவடிக்கை 4ஆம் ஆண்டு நிறைவு நாள் இன்று

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றிகொள்ள குடாரப்பில் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்கத்தின் நான்காம் ஆண்டு நிறைவுநாள் இன்றாகும். இவ் வெற்றிகரத் தரையிறக்கம் ஆனையிறவுப் பெருந்தளத்தை வெற்றிகொள்ள கால்கோளாயமைந்தது. ஆயிரக்கணக்கான புலிவீரர்களை ஆனையிறவுப் பெருந்தளத்தைத் தாண்டி அப்பால் தரையிறக்கும் நடவடிக்கையாக இது இருந்தது.

ஆயிரக்கணக்கான புலிவீரர்களைத் தரையிறக்கும் நடவடிக்கையிலீடுபட்டிருந்த கடற்புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்குமிடையில் பலத்த சண்டை மூண்டது.

கடற்புலிகள் கடற்படையை எதிர்கொண்ட வண்ணம் தரையிறக்கத்தில் ஈடுபட்டனர்.

சிங்களக் கடற்படையின் பத்தொன்பது கடற்கலங்கள், விமானப்படையின் எம்.ஐ.24 தாக்குதல் உலங்கு வானூர்திகள், கிபிர் குண்டுவீச்சு விமானங்கள் தாளையடி இராணுவ முகாமிலிருந்து டாங்கிகள் மூலம் தாக்குதல்களை தரையிறக்கும் நடவடிக்கையிலீடுபட்டி

(IVஆம் பக்கம் பார்க்க)

பூநகரி, பனை, தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச்சங்கம்

## வாக்காளர் இடாப்பு மூடுதல்

மேற்படி சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 31.03.2004 திகதியுடன் மூடப்படவுள்ளதால் இதுவரை பங்குகளை பூரணப்படுத்தாத அங்கத்தவர்கள் பங்குப் பணத்தினை பூரணப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தி.இராசகுமார்,
செயலாளர்,
பூ/ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
பூநகரி.

(4344)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



பருத்தித்துறை வடமராட்சி புலோலி மேற்கைச் சேர்ந்தவரும், கிளிநொச்சி தொண்டமான்நகரை வதிவிடமாகவும் கொண்ட ஆழ்வார் கதிர்காமு பாலசிங்கம் 05.03.2004 அன்று யாழ்.மேலதிக நீதிவான் திருமதி சிறீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிள்ளையார்கோயில் வீதி,
மணியன்குளம்,ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

திரு.பா. சண்முகராசாவும்,
பாரியார் ரஞ்சிதமலரும்.

(4346)



## வரிவிளம்பரம்

**இசைமதி ஒலிப்பதிவகம்**

கனகபுரம் என்னும் முகவரியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த இலத்திரனியல் உபகரணங்கள் தற்போது அதன் உரிமையாளர் சிறிதரன் என்பவரின் வீட்டு முகவரியான இல1145, திருநகர் தெற்கு, திருநகர் முகவரியில் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் வாடிக்கையாளர்கள் இம்முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். உரிமையாளர், சிறிதரன் (4343)

**பெயர்மாற்றம்**

இல-159, ஆனந்தநகர், கிளிநொச்சி எனும் முகவரியில் வசிக்கும் கந்தசாமி கடம்பமகருபன் ஆகிய நான் 25.03.2004 இல் இருந்து எனது பெயரை கந்தசாமி மயூரன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன். க.மயூரன். (4355)


## பிற்போடல்

நாளை நடைபெறவிருந்த முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் செயலாளர் செ. றெஜீனா தெரிவித்தார். இப் பொதுக் கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார். (20)




## வாழ்த்துகிறோம்

**செபஸ்தி தூசைநாதன்**

சமாதான நீதவான்

பூ.க.தொ.கூ.ச.தலைவர்
இரணை தீவு
[இரணைமாதாநகர்]

கடந்த 1972ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 25 வருடங்கள் சமாதான நீதவானாக இருந்து பல சமூக சேவைகளை ஆற்றிய பூநகரி இரணைதீவு (இரணைமாதா நகர்) சேர்ந்த திரு. செபஸ்தி தூசைநாதன் தற்பொழுது பூநகரி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவராக 18.02.2004 அன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதை மிகவும் மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

பூநகரிவாழ் மக்கள்,
பூநகரி கடற்றொழிலாளர் சங்கங்கள்.

(4347)



மல்லாவி யோகபுரம்
அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் சுவாமி தேவஸ்தானம்

## வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் 2004

சிவசிந்தையுறு மக்கள் நிறைந்த யோகபுரத்திலே யோகாம்பிகை சமேத யோகபுரநாதராக எழுந்தருளி எங்களுக்கெல்லாம் அருளை வாரிவழங்கிக் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு நிகழும் சுபானு வருடம் பங்குனித்திங்கள் 13ஆம் நாள் (26.03.2004) வெள்ளிக்கிழமை சித்தயோகமும் பஞ்சமித்திதியும் கார்த்திகை நட்சேத்திரமும் கூடிய சுபதினத்தில் பகல் 11மணியளவில் விழா கொடியேற்றத்துடன் ஆரம்பித்து நடைபெற திருவருள் பாலித்துள்ளதால் அன்று முதல் பத்து தினங்களும் நடைபெறும் விழாவிற்கு சிவனடியார்கள் விரதானுட்டானமாகவும் சிவசிந்தையுடனும் வருகை தந்து எம்பெருமானைத் தரிசித்து வேண்டிய இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

சிவப்பணியில் உள்ள சிவாலயபரிபாலன
சபையினர்.

(4348)





“ உ
சிவமயம் ”

## நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக

கரைச்சி

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயஆண்டுற்சவப் பொங்கல்

(04-04-2004)

விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான

## அறிவித்தல்

மேற்படி பொங்கல் விழா 4.4.2004 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்கள் எதிர்வரும் 28.03.2004 ஞாயிறு முற்பகல் 10.00 மணிக்கு வியாபார நிலையங்களுக்கான ஏலவிற்பனை ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு:-

உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் தமிழீழ சுகாதார சேவையினரின் கலந்துரையாடல் 30.03.2004 செவ்வாய் ஆலய முன்றலில் மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளதால் சகல உணவு கையாளும் உரிமையாளர்களும் தவறாது கலந்துகொள்ளவும், தவறும் வாணிபர்களுக்கு நிலைய அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஆலய பரிபாலனசபை.

(சி.9428)

# புலிகளின் த.அ.திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும்

## –அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்

சிறிலங்காவில் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் நியாயமாகவும் நீதி யாகவும் நடைபெறுவது அவசியம். அத்தோடு தேர்தலின பின்னர் விடு தலைப் புலிகளின் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப் படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என அவுஸ் திரேலியாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்மேபி நாடாளுமன்றில் உரையாற்றும் போது தெரிவி த்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் பகு திகளில் வாழும் மக்கள் தமது வஞ்சிமையைப் பயன் படுத்து வதற்கு ஏற்றவசதிகள் செய்து கொடுக்க வேண்டியது அவசியம்.

சனாதிபதிக்கும் ரணில் விக்கிர மசிங்கவுக்கும் இடையே நிலவிய அதிகாரப் போட்டி காரணமாக நாடா ளுமன்றம் கலைககப்பட்டது துர்ப் பாக்கியமான நிகழ்வு என்றும் அவுஸ் திரேலிய நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பி னரும் எதிர்க் கட்சித் தலைவரின் அவைச் செயலாளருமான ஜோன்மோபி தெரி வித்துள்ளார்.

# – முகமாலை சோதனைச் சாவடியூடு – எரிபொருளை எடுத்துச் சென்றவரின் உந்துருளியை மீளளிக்க உத்தரவு

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியினுள் விற்பனைக் காக எரிபொருளை எடுத்துச் சென்ற வேளையில் முகமாலையில் வைத்து தடுத்து வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை மீளக்கையளிக்குமாறு சாவகச்சேரி நீதவான் பொலிசா ருக்கு உத்தரவிட்டுள்ளார்.

உரிய அனுமதிப்பத்திரம் ஏதுமின்றி முகமாலைச் சோதனைச் சாவடியூடாக 116 லீற்றர் பெற்றோலை எடுத்துச் சென்றதாகக் குற்றம்சாட்டி பொதுமகன் ஒருவர் பொலிசாரால் அண்மையில் கைது செய்யப்பட் டிருந்தார்.

நேற்றுமுன் தினம் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை யில் ரூபா 250 குற்றப் பணம் செலுத்த உத்தரவிட்ட நீதவான் அவரது மோட்டார் சைக்கிளை மீளளிக்கவும் பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன் பறிமுதல் செய்யப் பட்டிருந்த பெற்றோலில் பத்து லீற்றரை அவருக்கு மீளக் கைய ளிக்க உத்தரவிட்ட நீதவான் மீதி பெற்றோலை இலங்கை பெற்றோ லியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப் பாணக் களஞ்சியத்தில் கையளிக் கவும் மேலும் உத்தரவிட்டுள்ளார். (27)

# வடக்கு கிழக்கில் பிறக்கும் நான்கிலொரு சிசு 2.5கி.கிராமிற்குக் குறைவாக இருக்கின்றது

## -போஷாக்குப் பற்றாக்குறை குறித்து யுனிசெப் பிரதிநிதி

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் குழந்தைகள் போஷாககின்மையால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின் றன. இது இம்மாகாணத்தின் பாரிய அபிவிருத்தியை மேற் கொள்வ தற்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது என்று யுனிசெப் இலங்கைப் பிரதி நிதி ரெட் செய்பான் தெரிவித்தார். ஜப்பானிய அரசினால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தாய்-சேய் நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அம்புலன்ஸ் மற்றும் வாகனங்கள் மாகாண சுகாதார அமைச்சுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட நிகழ் வில் பங்குபற்றிப்பேசும் போதே யுனிசெப் பிரதிநிதி இதனைத் தெரி வித்தார்.

"பிறக்கும் நான்கு சிசுக்களில் ஒன்று 2.5கிலோவுக்கு குறைந்த எடையில் பிறக்கின்றது. போஷாக் கின்மை குழந்தைகள் பூரண உடல், மனோ வளர்ச்சியைப் பெறுவதைத் தடுக்கின்றது. இது மிகவும் பாரிய துக்ககரமான நிகழ்வாகும்" -என்றும் யுனிசெப் பிரதிநிதி ரெட்செய் பான் தெரிவித்தார்.

இதனால் வடக்கு கிழக்கில் தாய்-சேய் சுகாதார நலன்களைப் பேணும் உட்கட்டமைப்பு வசதிக ளைப் பலப்படுத்த வேண்டும் என மேலும் அவர் கூறினார்.

ஜப்பான் பிரதித் தூதர் ஹிரோஷ் கறுபே தெரிவிக்கையில், இருபது வருட யுத்தம் வடக்கு கிழக்கின் மனிதவாழ்வு மற்றும் அபிவிருத்தி, சுகாதார உட்கட்டமைப்பு ஆகியவற றின் சகல அம்சங்களையும் பாரிய அளவு பாதித்துள்ளது என்றார். சமாதான முயற்சியை ஜப்பான் தீவிரமாக ஆதரிக்கின்றது. பாதிக் கப்பட்ட பிரதேசங்களின் புனர்வாழ் வுக்கு ஜப்பான் தாராளமான நிதி உதவியளிக்கின்றது என்றும் பிரதித் தூதர் கறுபே தெரிவித்தார். (25)

# கூட்டமைப்புக்கு ஆதரவுகோரி மன்னாரில் தெருவெளி நாடகங்கள்

மன்னாரில் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவு தேடும் முகமாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் சகல கிராமங்களிலுள்ள முக்கிய இடங்களில் தெருவெளி நாடகங்கள் இடம்பெற்று வருகின்றன. தமிழர்களின் பலத்தை உலக நாடுகளுக்கு தெளிவுபடுத்த வேண்டுமெனவும், எனவே, அனைவரும் வீட்டுச் சின்னத்திற்கு புள்ளடிகளை இட்டு கூட்டமைப்பு வெற்றியடையச் செய்ய வேண்டுமெனவும் கோரி நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. தற்சமயம் காந்திபுரம், சாவற்கட்டு, மன்னார் விளையாட்டரங்கு போன்ற இடங்களில் இவை இடம்பெற்று வருகின்றன. (மி)

## கிளி...

மாவட்ட சிறந்த பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன.

*திரேசா பெண்கள் கல்லூரி*

எம். வைஷ்ணவி 10 ஏ, பி. அபிரா 09ஏ, 01 பி, பி. துஷ்யந்தினி 06 ஏ, 3வி,

*கிளி. இந்து கல்லூரி*

எம். சிந்துஜா 10ஏ, எஸ். மயூரன் 08ஏ, 01பி, 01எஸ், வி. றமேஸ் 08ஏ, 01பி, 01எஸ், ஆர். நிசாந்தன் 08ஏ, 01பி, 01சி, வி. கவிதா 06ஏ, 03பி, 01எஸ், ஜி. ரஞ்சித்குமார் 06ஏ, 02பி, 2சி, ரி. திலீபா 5ஏ, 02பி, 02சி, 01எஸ், பி. கார்த்திகா 05ஏ, 03பி, 02சி, ஏ. துஸ்யந்தி 04ஏ, 03பி, 02சி,01எஸ், என். கயல்விழி 03ஏ, 03பி, 03சி, 01எஸ், எஸ்சுஜிதா 03ஏ, 01பி, 02சி, 01எஸ்,

*பூநகரி ம. வி.*

ஏ. கத்சா 10ஏ, பி. பாமினி 09ஏ, 01பி, எஸ். மகிந்தினி 05ஏ, 04பி, 01எஸ், ஜி. கஜேந்திரன் 05ஏ, 01பி, 01 சி, 02 எஸ், ஏ. கஜேந்திரன் 04ஏ, 03பி, 01சி, 01 எஸ், கே.கஜேந்தினி 03ஏ, 03பி, 03சி, 01 எஸ், எஸ். கோணேஸ்வரன் 03ஏ, 01பி, 03சி, 02எஸ், ஜி. நிர்மலதா 03ஏ, 03பி, 01சி, 02எஸ், எஸ். கணேஸ்வரன் 03ஏ, 01 பி, 03சி.

*திருவையாறு அ.த.க.பாடசாலை*

ஆர். அரவிந்தி 08ஏ, 02பி, கே.சுபேந்திரன் 08ஏ, 01பி, 01எஸ், கே. கரன் 08ஏ, 02சி, வி. ரோகினி 06ஏ, 02பி, 01சி, 01எஸ், பி. துவாரகா 05ஏ, 02பி, 01சி, 02எஸ், எஸ். அனுசியா 04ஏ, 04பி, 01சி, 01, வி. கௌசலியா 04ஏ, 04பி, 01சி, 01, பி.விஜிதா 4ஏ,3பி,2சி, எம்.பாலமுரளி 04ஏ, 02பி, 02சி, 01 எஸ், கே. மலரவன் 03ஏ, 02பி, 03சி, 02எஸ், டி. பிரிமனா 03ஏ, 01பி, 02சி, 04எஸ், எஸ். தர்மினி 03ஏ, 01பி, 02சி, 02எஸ்.

*கிளி. ம.வி.*

ரி. ஜீவிதா 08ஏ, 01சி, 01எஸ், வி. மீனா 07ஏ, 02சி, 01 எஸ், ரி.துவேசன் 07ஏ, 02சி, 01எஸ், இ.கோபிகா 05ஏ, 02பி, 02சி, 01 எஸ், ரி. அரவிந்தன் 04ஏ, 04பி, 01சி, 01எஸ், இ. வக்கிகா 04ஏ, 02பி, 03சி, 01எஸ், பி. திலீபன் 4ஏ, 02பி, 03சி, பி. நந்தினி 04ஏ, 01பி, 04சி, 01எஸ், எஸ். தாட்சாயினி 5ஏ, 03பி, 02சி, வி. கிருபாகரி 03ஏ, 03பி, 04சி, 01எஸ், ரிமனோரதி 03ஏ, 03பி, 01சி, 01எஸ்.

*இராமநாதபுரம் ம.வி.*

எஸ். துவாரகா 06ஏ, 01பி, 02சி, 01எஸ், எம். லக்சிகா 05ஏ, 03பி, 02சி, பி. தர்சிகா 05ஏ, 03பி, 02சி, 01எஸ், ஜே. டொறனி ஒவிவியா 04ஏ, 04பி, 02சி, ஆர்.ரஜனி 04ஏ, 02பி, 03சி, 01எஸ், ஆர். தினுசா 04ஏ, 02பி,02சி, சி. கோபிநாத் 03ஏ, 03சி, 01சி, 02எஸ்,

*முழங்காவில் ம.வி.*

கே. நிசாந்தி 07ஏ, 03சி, கே.நவநீதபாரதி 03, 03பி, 02சி, 01எஸ், பி. நிசாந்தினி 03ஏ, 02பி, 01சி, 01 எஸ், ஏ, சுதர்சினி 02ஏ, 02பி, 03சி,

*உருத்திரபுரம் ம.வி.*

ரி. துசிந்தா 04ஏ, 01பி.04சி, வி.கீதாவினி 05ஏ, 5சி, கே. நிசாந்தி 04ஏ, 01சி, 03சி, 01எஸ், ஆர்.விதுசா 03ஏ, 04பி, 03சி,

*பளை மத்திய கல்லூரி*

எஸ். யோகலச்சுமி 07ஏ, 02சி, 01எஸ், ஏ, ஜீவிதா 03ஏ, 04பி, 02சி, 01எஸ், கே. கலைச்செல்வன் 03ஏ, 02பி, 03சி, 01எஸ், ஏ, அனுசா 3ஏ, 01பி, 03சி, 01எஸ், எஸ்.ஸ்ரீவித்தியா 02ஏ, 03பி, 01சி, 02எஸ், ஆர். ரஜிகரன் 02ஏ, 01பி, 02சி, 03எஸ், ஆர். கவிதாசன் 02ஏ, 01பி, 05சி, 01 எஸ், ரி. ஸ்ரீநிதி 02ஏ, 01பி, 05சி, 01எஸ், என்.கலைச்செல்வி 02ஏ, 06சி, 02எஸ், எஸ். புஸ்பரதி 02ஏ, 04சி, 02எஸ், கே. சிந்துஜா 02ஏ, 02சி, 05எஸ், எஸ். லநுஜா 02ஏ, 02சி, 04எஸ், ரி. அனுஜா 02ஏ, 07எஸ்.

*தர்மபுரம் ம.வி.*

பி. நவீனா 04ஏ, 01பி, 04சி, 01 எஸ், ரி. சாளினி 03ஏ, 02பி, 02சி, 01எஸ், என். நீலவேணி 02ஏ, 02பி, 04சி, 02எஸ், வி. நந்தினி 02ஏ, 01பி, 02சி, 03எஸ்.

*கிளி. மத்திய கல்லூரி*

வி. மகிளினி 05ஏ, 02பி, 03சி, ஜி. அம்பிகைபாலன் 04ஏ, 01பி,04சி, வி. ரேகா 03ஏ, 01பி, 02சி, 03எஸ்.

*வட்டக்கச்சி ம.வி.*

ஆர். சந்திரராஜ் 06ஏ, 02பி, 02சி, ரி. கீதரோகினி 03ஏ, 05பி, 01சி, கே. பாஸ்கரன் 03ஏ, 04பி, 02சி, 01எஸ்.

*முரசுமோட்டை தே.அ.த.பாடசாலை*

வி. விஜயதர்சன் 04ஏ, 03பி, 02சி, 01எஸ்,

*கோணாவில் அக்கராயன் அ.த.பாடசாலை*

எஸ். தயமந்தி 04ஏ, 05சி, 01எஸ், என். ஜெனோட் 02ஏ, 01பி, 02சி, 03எஸ்.

*கிளி. பாரதி வித்தியாலயம்*

எவ். ஜென்சி 02ஏ, 02பி, 03சி, 02எஸ், ரி. சத்தியசீலன் 02ஏ, 02பி, 03சி.

*அக்கராயன் ம.வி.*

எஸ். கோகுலன் 03ஏ, 02பி, 04சி, 01எஸ், எம். மேரி பிரதீபா 03ஏ, 03சி, 03எஸ், எஸ். பிரேமினி 02ஏ, 02பி, 04சி, 01எஸ், ரி. மோகனஸ்ரீ 02ஏ, 01பி, 02சி, 04எஸ், எஸ்மிகிலா 02ஏ, 01பி, 02சி, 04எஸ், எம்.பிரியதர்சன் 02ஏ, 01பி, 02சி, 02எஸ்.

*பரந்தன் இ.ம.வி.*

ஆர். நிமல்ராஜ் 02ஏ, 02பி, 04சி, 01எஸ்.

*வேம்போடுகேணி அ.த.க. பாடசாலை.*

என்- சுஜிபா 07ஏ,01பி,01சி, வி.ஆஷா 02ஏ, 01பி,03சி,02எஸ், ரி.நதியா 02ஏ,04சி, 03எஸ்,

*இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை.*

எஸ்.தர்சினி 03ஏ, 03பி,02சி, 01எஸ், எம்.வேணுதன் 02ஏ,03பி,02சி,02எஸ், வி.பிரசன்னா 02ஏ,02பி,01சி,02எஸ், ரி.தர்சிகன் 02ஏ,04சி, 03எஸ்.

*பிரமந்தனாறுஅ.த.க.பாடசாலை.*

கே.தேவபாலன் 02ஏ, 02பி, 02சி,01எஸ்,

*புனித மத்தியாஸ்தே.க.பாடசாலை.*

ஆர்.பவுள்ராஜ் 02ஏ, 02பி,05எஸ், எஸ்.சுரேஸ் 02ஏ.01பி, 02சி, 03எஸ்.

*கனகபுரம் ம.வி.*

வி.தர்சிகா 02ஏ, 02பி, 03சி, 02எஸ், ஆர்.யோகரூபன் 02ஏ, 02பி, 02சி, 02எஸ், எஸ்.சியாம்சுந்தர் 02ஏ, 01பி, 03சி,04எஸ்,

*கிளி/முரசுமோட்டை முருகானந்தா ம.வி.*

எஸ்.சதீஸ்வரன் 02ஏ,03பி, 04சி, வி.கிருஷாந்தி 02ஏ, 03சி,03எஸ்,

*பூநகரி நல்லூர் அ.த.க.பாடசாலை.*

யு.அனுலா 03ஏ, 02பி, 04சி, 01எஸ், என்.பாலராஜ் 02ஏ,03பி,04சி, ஜி.மயூரி 02ஏ,02பி, 04சி, 02எஸ், ரி.தினேஸ்காந்தி 02ஏ,02பி,04சி,01எஸ், பி.மேனகா 02ஏ,01பி, 04சி,01எஸ்,

*கண்டாவளை ம.வி.*

எஸ்.பிரசுகன்யா 06ஏ,03பி,01எஸ், எஸ்.ஜன்சா 04ஏ,05சி, ரி.மேனகா 02ஏ,03பி, 01சி,01எஸ், எஸ்.சகன்யா 02ஏ,02பி,04சி,01எஸ், எஸ்.ஜானகி 02ஏ,3சி,3எஸ்.

*பூநகரி கறுக்காய்தீவு அ.த.க. பாடசாலை*

ஏ.ஜெயதீசன் 3ஏ,01பி,04சி,01எஸ், வி. ஜெயகாந்தன் 03ஏ, 01பி,04சி, 01எஸ்.

*ஜெயபுரம் அ.த.க. பாடசாலை*

எஸ். நிர்சலா 03ஏ, 01பி, 02சி, 02எஸ், எஸ். துஷ்யந்தி 02ஏ, 01பி, 02சி, 04எஸ்.

*நாச்சிக்குடா அ.த.க. பாடசாலை*

எம். மரியவினோதினி 02ஏ, 01பி, 02சி, 03எஸ்.

*பூநகரி வேரவில் இந்து ம.வி.*

எ.சிவிகா 02ஏ, 02சி, 03எஸ்.

(சோ)


## தகவல் தொழில்நுட்பம்/ஆங்கிலக்கற்கை நெறி பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு

இலண்டன் ரிஆர் ரெக் (TR Tech) நிறுவன அனுசரணையுடன் சர்வதேச சான்றிதழ்களுடன் கூடிய பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 27.03.2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எமது நிறுவன மண்டபத்தில் இடம்பெறும். இலண்டனில் இருந்து வருகை தந்த விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் இந்நேர்முகத்தேர்வுக்கு பின்வரும் ஆவணங்களுடன் வருகை தரவும்.

1. வதிவிட அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி, நிழற்பிரதி)
2. தேசிய அடையாள அட்டை
3. கல்வித்தகைமைச் சான்றிதழ்கள் " "
4. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் " "
5. ஏனைய தகைமைச் சான்றிதழ்கள்

தகவல்:
அதிபர்,
தொழில்நுட்பக்கல்வி
நிறுவனம்.

(சி-9339)



## உ
## திருமண அழைப்பு

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

*அன்புடையீர்!*

*நிகழும் மங்களகரமான சுபானுவருடம் பங்குனிமாதம் 14ஆம் நாள் (27. 03. 2004) சனிக்கிழமை சத்தமி திதி மிருகசீரிட நட்சத்திரமும் கூடிய சுபயோக தினத்தன்று பகல் 1.22மணிமுதல் 2.17 மணிவரையுள்ள கடகலக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்*

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறைச் செல்வன்
**சிவதரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறைச் செல்வி
**பாலகௌரி**
அவர்களுக்கும்

*இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

எமது தற்காலிக வதிவிடம் காரணமாக தனிப்பட்ட அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகம் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி.அ.பூதத்தம்பி,
(நீர்வேலி வடக்கு)
அம்மன்கோவில்வீதி, துணுக்காய்.
அ.பூ.இ.ஸ்ரான்ட்போர்ட்சேவிஸ்

திரு.திருமதி.ந.கணபதிப்பிள்ளை,
உயிலங்குளம், துணுக்காய்.

(இருவீட்டார் அழைப்பு)

(4354)

# ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள மக்கள் உரிய முறையில் வாக்களிக்க உதவுக

## ஜோசப்பரராஜசிங்கம் கண்காணிப்புக்குழுவிடம் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச மக்கள் உரிய முறையில வாக்களிக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண டும் என மட்டக்களப்பு தமிழ்க் கூட்டமைப்பு தலைமை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் வேண்டு கோள் விடுத்துள்ளார். நேற்று தம் மைச் சந்தித்த ஐரோப்பிய ஒன் றிய கண் காணிப் புக் குழுவின ருடனான சந்திப்பின் போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இராணுவக்கட்டுப்பாடு அற்ற பகுதி பிரதேசத்தில் சுமார் 80 முதல் 84ஆயிரம் வாக்காளர்கள் இருக்கின்றனர். இவர்கள் இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத் தில் அமைக்கப்படவுள்ள கொத் தணி வாக்குச்சாவடிகளிலேயே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டுள் ளது. இந்த நிலையில் கடந்த 2001ஆம் ஆண்டில் இருந்து இந்த வாக்காளர்கள் வாக்களிப்பில் இருந்து தடுக்கப்படும் ஆபத்து இருப்பதாக ஜோசப் பரராஜ சிங்கம் அச்சம் வெளியிட்டுள்ளார்.

இன்றைய சந்திப்பில் ஐரோப் பிய ஒன்றியத் தேர்தல் கண்கா ணிப்பு உதவித்தலைவர் கார்லோ எக்கம் மற்றும் தேர்தல் அவ தானி டெல்பின் லென்சி ஆகி யோர் பங்கேற்றனர். (32)

# தாம் பிரச்சாரத்தில் ஈடுபட சர்வதேச பாதுகாப்பு தேவையாம்

## - டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எம்மால் பிரச்சார நடவடிக்கைளில் ஈடுபட முடியவில்லை. எனவே எமக்குச் சர்வதேசமே பாதுகாப்புத் தர வேண்டு மென ஈ.பி.டி.பி. செயலா ளர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள் ளார். நேற்று யாழ். நகரில் ஈ.பி. டி.பி. முக்கிய முகாமொன்றில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பிலேயே அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

யாழ். குடாநாட்டில் எதிர்வரும் தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்கு மோசடிகளும் இடம்பெறக் காத்திருக்கின்றது. இதற்குரிய முன்னேற்பாடாக திருட்டுத்தன மாக போலி வாக்குச் சீட்டுக்கள் பல அச்சகங்களிலும் அச்சிடப் பட்டு வருகின்றன. இதை என் னால் ஆதாரபூர்வமாக நிருபிக்க முடியும்.

இவ்விடயத்தில் 'பெவ்ரல்' தேர்தல் கண்காணிப்பாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். இதற்காகவே சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் யாழ். குடா நாட்டில் கண்காணிப்புப் பணிக ளில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

தேர்தல் சம்பந்தமான கூட்டங் களில் நாம் யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரால் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். எம் மால் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை. நாம் எமது முகாம்களுக்குள்ளேயே முடங் கிக் கிடக்கின்றோம். எம்மை முடக்கி வைக்க வேண்டும் என்ற விடயத்தில் புலிகள் வெற்றி கண்டுள்ளனர். எனவே எமக்கு சர்வதேசமே பாதுகாப்பைத் தர வேண்டும் என்றார். (33)

# ராஜன்சத்திய மூர்த்திக்கு விருப்பு வாக்களிக்கக் கோரவேண்டும்

## கூட்டமைப்பினரிடம் கருணாவின் அடியாட்கள் வற்புறுத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளர்களை நேற்று கொக்கட்டிச் சோலைக்கு அழைத்த கருணாவின் அடியாட்கள் விருப்புவாக்குகளில் ஒன்றரை ராஜன்சத்திய மூர்த்தி என்பவருக்கு அளிக்குமாறு மக்களைக் கோர வற்புறுத்தியுள்ளனர்.

கூட்டமைப்பு வேட்பாளர்கள் அனைவரையும் அழைத்த அவர்கள் பிரச்சாரம் செய்யும் போது அனைவரும் விருப்பு வாக்குகளில் ஒன்றை ராஜன் சத்தியமூர்த்திக்கு அளிக்குமாறு மக்களிடம் கூறுமாறு வற்புறுத்தியுள்ளனர். இதன்போது கூட்டமைப்பு தலைமைவேட்பாளர் ஜோசப்பரராஜசிங்கம் கலந்து கொள்ளவில்லை.

# பீடாதிபதி மீதான துப்பாக்கிச் சூட்டை கண்டித்து மட்டு. இல் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழக விவசாய பீடத்தில் பதில் பீடாதி பதி கலாநிதி திருச்செல்வம் மீதான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து பல்கலைக்கழகத்தின் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

மட்டக்களப்பு பல்கலைக்கழ கச் சமூகத்தினால் ஏற்பாடு செய் யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கல்வி மற்றும் கல்வி சாராத் துறைகள் உட்பட பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பிரிவின ரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த ஆர்ப்பாட் டத்தின் போது இப்படி ஒரு சம்ப வம் இனிமேல் நடைபெறாமல் இருப்பதை சகல தரப்பும் உறுதிப் படுத்த வேண்டும் என்ற கோரிக்கை யும் முன்வைக்கப்பட்டுள்ளது.

### திருநெல்வேலியில்...

விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டுள்ளனர். இதனை அடுத்து அங்கு வந்திறங்கிய பொலிசார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை விரட்டியடிக்கும் விதமாக குண்டாந்தடிப் பிரயோ கம், கண்ணீர் புகைக்குண்டு வீச்சு என்பவற்றை சரமாரியாக நடத்தி யுள்ளனர். இதனால் இருதரப் பினருக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றம் நிலவி யுள்ளது. இதேவேளை, பொலிஸ் ஜீப் ஒன்றும் கல் வீச்சில் சேதம டைந்தது. (27, 33)

### சுயேட்சை...

குறித்து எமக்குத்தெரியவந்தது. நாங்கள் எமது தேசியத்திற்கோ தேசிய விடுதலைக்கோ என்றும் விசுவாசமானவர்கள் எனவே இன்றிலிருந்து சுயேட்சை வேட் பாளர் இல.2ல் இருந்து விலகு கிறோம் என இ.முகுந்தன், சி.தனேஸ்வரன், சி.சிவகாந்தன், தெ.ஜெகதீபன், ஜெ.காண்டீபன், ஆ.சிவனேஸ்வரன், கா.செல் வராணி, தெ.பைரவி, ச.ஜெயவ தனி ஆகியோர் தெரிவித்துள் ளனர். (சோ)

### தாக்குதல்கள்...

யாழ்நகரமெங்கும் கடையடைப்பு மற்றும் வீதிமறியல் போர் என் பன பரவலாக இடம்பெறவுள்ள துடன் கண்டன ஆர்ப்பாட்டங்க ளும் இடம்பெறும். (33,27)

## - பரந்தன் பகுதியிலமைக்கப்பட்ட -

# பாலங்கள் இரண்டும் நேற்று முதல்பாவனைக்கு

(அலுவலகசெய்தியாளர்)

ஏ-9 வீதியில் பரந்தன் பகுதி யில் புனரமைக்கப்பட்டு வந்த பாலங்கள் இரண்டும் நேற்று முதல் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளன.

மேற்படி பாலங்கள் இரண்டும் கிளிநொச்சியை சிங்களப் படைகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த வேளை முற்றாக சேதமாக்கப்பட்டிருந்தன. எனினும் இதனூடாகவே மக்கள் தமது போக்குவரத்துக்களை மேற் கொண்டு வந்தனர். இந்தநிலை யில் ஒரு வருடங்களுக்கு முன் னர் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி அருகருகாக இருந்த இரண்டு பாலங்களும் புனரமைக் கப்பட்டு அதற்கான வேலைகள் யாவும் நிறைவுபெற்ற நிலையில் அதனூடான போக்குவரத்து நேற்றி லிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் புனரமைப்பு வேலைகள் ஆரம் பிக்கப்பட்டிருந்த கரடிப்போக்குப் பாலம் புனரமைப்பு வேலைகள் நிறைவு பெறும் தவறுவாயில் உள்ளதால் அதனூடான போக்கு வரத்தும் இன்னும் ஒருசில தினங்களில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (லோ,பி)

### குடாரப்பு....

ருக்கும் கடற்புலிகளை நோக்கி நடத் திய போதும் கடற்புலிகள் மிகவும் வீரதீரத்துடன் அவற்றின் தாக்குதலை முறியடித்து தமிழீழ விடுதலைப்போரில் புதிய அத்தி யாயமாக மிகப் பெரும் தரையி றக்கத்தை வெற்றிகரமாக நடத்தினா.

இத்தரையிறக்கமானவை எதிரியின் பலம் பொருந்திய கோட்டையினையும் கடந்து மேற்கொள்ளப்பட்டது. இந் நட வடிக்கைக்கு கனரக பீரங்கிப் படையின் உதவி மட்டுமே இருந் தது. கடற்படையின ரின் பாரிய எதிர்த்தாக்குதலும், தரைப்படை யின் தாக்குதலும் அதிகமாக இருந்தது. நகர்வின் தூரம் அதிகமாக இருந்தது.

தரையில் இருந்தும் கடலில் இருந்தும் சிங்களப் படைகளின் எதிர்ப்பினையும் மிக இலாவகமாக தற்துணிவுடன் சமாளித்து ஓயாத அலைகளின் சிறப்பு அணிகளுக்கு பாதுகாப் பையும் விநியோகத்தையும் கடற்புலிகள் அணியினர் மேற் கொண்டனர்.

இவ்வாறு பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்து வெற்றிகரமாக நடத்தப்பட்ட இத்தரையிறக்கம் ஆனையிறவு மீட்புக்கு வழிகோலி யது. வெற்றிக்கு வித்திட்ட தரை யிறக்கத்தினை குடாரப்பு தரையிறக்க நினைவுக்கல் என்றும் நினைவூட்டும்.

### பிரச்சாரத்தில்...

தெரிய வருவதாவது, யாழ். கொக்கு விலில் உள்ள மஞ்சவனப்பதி எனும் பிரதேசத்தில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினருக்கு ஆதரவு திரட்டும் முயற்சிகளில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு இராணுவ மற்றும் பொலிஸ் பாது காப்புடன் வந்திறங்கிய ஈ.பி.டி. பி.யினர் மாணவர்களைத் தாக்கி யுள்ளனர். இதனால், அப்பகுதி யில் ஏற்பட்ட பரபரப்பைத் தொடர்ந்து அங்கு குவிந்த மக்களும், மாண வர்களும் ஈ.பி.டி.பி.யினரைத் தாக்கி விரட்டியடித்துள்ளனர்.ஈ.பி.டி.பி.யினர் பல்கலைக்கழக மாணவர்களைத் தாக்கிய மேற்படி சம்பவம் குறித்த மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் போர் நிறுத்த கண்காணிப் புக்குழு ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர் பில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் மற்றும் பொது அமைப்புக் கள் என்பன கண்டன அறிக்கை களை வெளியிட்டுள்ளன.(33,27)

### துரோகி...

டங்களின் தளபதியாக இருந்த கருணா தான் புரிந்த குற்றங் களை மறைப்பதற்காகப் பிரதேச வேறுபாட்டையுஞ் சகோதரச் சண்டை யையும் ஒருங்கே ஏற்படுத்த முனைகிறார்.

மட்டக்களப்பு மக்களும் போராளிகளுந் தேசியத் தலை வரை அணுகவிடாமலும் அவ ரோடு தொடர்புகொள்ள முடியா மலுந் தடுத்து வைத்திருந்து, தன் குற்றங்களை மறைக்க முனைந்தார். அதையும் மீறி, அவரின் பாலியற் குற்றங்களும் நிதி மோசடிகளும் தன்னிச் சையான படுகொலைகளும் தலைமைப்பீடத்திடம் ஆதாரபூர்வ மாக நிரூபிக்கப்பட்ட போது, விசார ணைக்காக அவர் அழைக்கப் பட்டார். தனது குற்றங்கள் நிருப ணமாகி, ஒழுக்காற்று நடவடிக கை எடுக்கப்படுமென அஞ்சிய கருணா, தலைமையின் கட்ட ளைக்குக் கீழ்ப்படிய மறுத்ததுடன் தலைமையின் மேற் பொய்யான பல பழிகளையுஞ் சுமத்தினார். அத்தோடு, தான் பிரிந்து இயங்கப்போவதாகவும் தானே கிழக்கு மாகாணத்தின் தலைவர் என்றும் மீனக வளாகத்திற்குப் பொது மக்கள் சிலரையும் அழைத்து போராளிகளின் முன் பிரகடனம் செய்துள்ளார். இத்தனை ஆண்டுகாலமாக ஆயிரமாயிரம் மாவீரர்களினதும் கரும்புலிகளினதும் புனிதமான உதடுகளால் உச்சரிக்கப்பட்டு வந்த உறுதிமொழியைச் (சத்தி யப் பிரமாணத்தை) செய்யவி டாது தடுத்துள்ளார். எம்மாவீரர் மீது போர்த்தப்படுவதும் உலகத் தமிழர்களால் வணங்கப்படு வதுமான எம்முயிரினும் மேலான தேசியக்கொடியை அவமதித்துள் ளார். எமது தலைவரின் படங் களை உடைக்கும் படியும் எரிக் கும் படியும் போராளிகளை வற்புறுத்தியுள்ளார். தமிழ்த் தேசியத்தைக் கொச்சைப்படுத்தி ஊடகங்களுக்குக் கருத்து வழங்கி யுள்ளார். மட்டு-அம்பாறை மாவட் டத்திற் பல்வேறு படுகொலைக ளுக்கும் பாரிய சொத்தழிவுக ளுக்குங் காரணமாக இருந்த தேசத்துரோகிகளுடனும் எதிரிப் படைத் தளபதிகளுடனும் தன்சுய நலத்திற்காகக் கூட்டுவைத்துள் ளார். உண்மைநிலையினைத் தெளிவுபடுத்தும் பத்திரிகைகளை எரித்தும் ஊடகங்களைத் தடை செய்தும் மட்டக்களப்பு அம்பாறை மக்களுக்கு உண்மை நிலை தெரியவராது தடுத்துவருகிறார்.

நாம் போராளிகளாக இணையும் பொழுது உறுதியெடுத்துக் கொள்ளும் குறிக்கோள் மற்றும் செயற்பாட்டுக் கோவையின்படி இவை அனைத்தும் தண்டனைக் குரிய குற்றங்கள் என்பதை நீங் கள் அனைவரும் அறிவீர்கள். குற்றங்களை ஏற்று, மன்னிப்புப் பெறுவதற்கான காலஅவகா சத்தை எமது தலைவர் கருணா விற்கு வழங்கியும் கருணா அதை ஏற்றுக்கொள்ளவில்லை. மட்டக் களப்பு அம்பாறை மக்களைப் பிரதேசவாதத்தால் ஏமாற்றி, சுரண்டி, தன் உல்லாச வாழ்க்கை யையும் சொகுசுகளையும் தொடர்ந்து அனுபவிக்கத் திட்டந் தீட்டிவருகிறார். மட்டக்களப்பு-அம்பாறை மக்கள் இன்னமும் கருணாவாற் சுரண்டப்படுவதை எமது தேசியத் தலைமை அனும திக்கப்போவதில்லை. இன்று உலகத்தின் முன் குற்றவாளியா கவும் துரோகியாகவும் அவமானப் பட்டுநிற்கும் கருணா தன்னைத் தண்டனையிலிருந்து காப்பதற் காக உங்களை முன்னே நிறுத் திப் பலிகொடுக்கத் திட்டமிடு கிறார். அப்பாவிப் போராளிகள் எவரும் அநியாயமாகப் பலியாகக் கூடாதென்பதே எமது தேசியத் தலைவரது நோக்கமாகும்.

உண்மைநிலையை அறியாப் போராளிகளையும் மக்களையும் பயன்படுத்தி, எம் விடுதலைப் போராட்டத்தையும் எம் மண்ணை யும் துரோகிகளுக்கும் எதிரிக ளுக்கும் விற்றுவிடுவதே கருணா வின் திட்டமாகும். நாம் இதுவரை சிந்திய இரத்தத் தையும் புரிந்த தியாகங்களையும் அந்நியருக்கு விற்கின்றார். எம்மி னத்தைக் காப்பதற்காக, துரோகி கருணாவை எம்மண்ணிலிருந்து களைவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கருணாவின் துரோகத்தைப் போராளிகள் நன்கு விளங்கிக் கொண்டு உடனடியாகக் கரு ணாவை விட்டு விலகிவிடவேண் டும். கருணாவின் மீது, ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப்படு வதை எதிர்க்க முனையும் எவ ரும் தமிழ்த் தேசியத்தின் துரோ கியாகவே கணிக்கப்படுவார். அமைப்பில் இணைந்துள்ள அனைவரும் எமது தேசியத் தலைவர் மேதகு. வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்களின் தலைமையை ஏற்று இணைந்தவர் கள் என்ற வகையிலும் தலை வரை நம்பியே பெற்றோர்களும் தம்பிள்ளைகளைத் தந்துள்ளார் கள் என்ற வகையிலும் உண்மையை அறியாமல் கருணாவின் அருகில் நிற்கும் போராளிகள் நிலைமை யைப் புரிந்துகொண்டு கருணாவை விட்டு விலகிவரவேண்டுமென மீண்டும் வேண்டுகிறோம்.

கருணாவை விட்டு விலகி, வீடு சென்று தம் குடும்ப உறவுகளு டன் இணைந்து வாழ விரும்பு பவர்களுக்கும் எமது தேசியத் தலைவர் பூரண அனுமதி வழங்கியுள்ளார் என்பதனையும் அறியத்தருகிறோம். போராளி களில் எவராவது இனிமேலும் கருணாவின் சார்பாக ஆயுத மேந்தி நின்றால், அதன் விளை வுகளுக்கு அப்போராளியே தனிப்பட்ட பொறுப்பாளியாவார். அவரின் இறப்பும் மாவீரர் பட்டி யலிற் சேர்த்துக்கொள்ளப் படமாட்டாது.

கருணாவும் அவரது அடிவருடி களும் செழிப்பதற்காகத் தமிழீ ழம் மீட்கப் புறப்பட்ட போராளி கள் அநியாயமாக மடியவேண் டுமா? கருணாவின் பக்கம் நிற் கும் அணித்தலைவர்கள் பொறுப புணர்வுடன் சிந்தித்து வரலாற்றுப் பழியிலிருந்து விலகவேண்டும்.

மட்டக்களப்பு-அம்பாறை மண் ணின் வீரவரலாறு கருணாவாற் கறைபடிந்து நிற்கலாகாது. எமது மண்ணின் மாவீரமும் அர்ப்பணிப் பும் உழைப்பும் தலைநிமிர்ந்து நிற்கும் வகையில் நாம் அனை வரும் ஒன்றுபட்டு உழைப்போம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"


## வேலையாட்கள் தேவை

மில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிடம், உணவுவசதிகள் உண்டு. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு-

சிவனருட்செல்வன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

(சி-9280)